## 185 திட்டப்பகுதிகளில் 70,673 புதிய குடியிருப்புகள் கட்ட ரூ.708 கோடி கூடுதல் நிதி ஒதுக்கீடு!

## அ.தி.மு.க. ஆட்சியில் பொதுமக்களுக்கு வழங்காத குடியிருப்புகளையும் சேர்த்து

# 35,866 குடியிருப்புகளை - ஏழை எளிய மக்களுக்கு வழங்கி கழக அரசு சாதனை!

## சட்டப்பேரவையில் – நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய மானியக் கோரிக்கை பதிலுரையில் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!

**சென்னை, ஜீன் 24-**

**சட்டப்பேரவையில் நேற்று முன்தினம், நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் தொடர்பான மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசிய அமைச்சர் தா.மோ.அன்பரசன், "ரூ.70 கோடி மதிப்பீட்டில் அடுக்கு மாடி குடியிருப்புகளின் புனரமைப்புப் பணிகள் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய திட்டப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும்" - "185 திட்டப் பகுதிகளில் 70 ஆயிரத்து 673 புதிய குடியிருப்புகள் கட்ட ரூ.708 கோடியே 81 லட்சம் கூடுதலாக நிதி ஒதுக்கீடு" என்பன உள்ளிட்ட பல அறிவிப்புகளை வெளியிட்டார்.**

**மேலும் அமைச்சர் தமது பதிலுரையில், "அ.தி.மு.க. ஆட்சியில் பொது மக்களுக்கு வழங்காத குடியிருப்பு களையும் சேர்த்து 35,866 குடியிருப்புகளை ஏழை எளிய மக்களுக்கு வழங்கி கழக அரசு சாதனை படைத்துள்ளது" என்று பெருமிதத்து டன் குறிப்பிட்டார்.**

சட்டப் பேரவையில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் அளித்த பதிலுரை வருமாறு:-

தாயுமானவராய் தமிழ்ப்பால் ஊட்டி நம்மை வளர்த்தெடுத்த தங்கத் தலைவர் கலைஞர். ஆயிரம் ஆண்டு சாதனைகளை நிகழ்த்திக்காட்டிய நூற்றாண்டு நாயகர். தென்னாட்டு காந்தி அண்ணாவின் வழியில் கைநாட்டு மனிதர்களை கல்வி அறிவு தந்து உயர்த்திய கலங்கரை விளக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) வங்கக் கடலோரம் உறங்கும் வரலாற்று அதிசயம். முத்தமிழ் அறிஞர் கலைஞருக்கு என் முதல் வணக்கம்.

மூன்றாண்டு ஆட்சியில் முழுமையாக மக்கள் மனதைக் கவர்ந்து இருக்கும் மாண்புமிகு முதல்வரே! எங்கள் பாசமிகு தலைவரே! நாற்பதும் நமதானதால் எதிரிகள் இனி தோற்பது உறுதி என்று ஒடுகிறார்கள். விக்கிரவாண்டி இடைத் தேர்தலில்கூட நிக்கிற ஐடியாவே இல்லை என்று ஒருவர் புலம்புகிறார். இடக்கு செய்த வடக்கை அடக்கி ஆளுவதற்கான தொடக்கம்தான் இந்த வெற்றி. "ஒரே நாடு; ஒரே கோடு" என்று உளறியவர்களை மாநில கட்சிகளிடம் மண்டியிட வைத்திருக்கிறார் நம் தளபதி. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியா கூட்டணிக்கு பிள்ளையார் சுழி போட்டு இந்தியாவின் ஜனநாயக கட்டமைப்பைக் காப்பாற்றிய இணையற்ற தலைவர் நம் முதல்வர். அரசியலமைப்பு சட்டத்தை சிதைக்க நினைத்தவர்களையே அரசியலமைப்பு சட்டப் புத்தகத்தின்முன் மண்டியிட வைத்த மகத்தான தலைவர்தான் நம் தலைவர். (மேசையைத் தட்டும் ஒலி) தலைமை ஏற்றதில் இருந்து தனித்துவமிக்க வெற்றிகளை குவித்து வரும் தலைவரே. விடியல் ஆட்சியினுடைய வெளிச்ச கீதமே! எங்கள் மூச்சுக் காற்றாய் இருக்கும் முதல்வரே உங்களுக்கும் என் வணக்கம்.

தமிழகத்தின் நாளைய வரலாறு இளைய சூரியன் உதயநிதி அவர்களே. கலைஞர் படைக்கும் இளைஞர் படைக்கும் தலைமை ஏற்று வரலாறு படைக்கும் வருங்கால வசந்தமே! உச்சி வெயிலில் ஓடி, ஓடி பரப்புரை செய்து மக்களவைத் தேர்தலில் அசத்திய மாமன்னனே! (மேசையைத் தட்டும் ஒலி) கலைஞரின் நகைச்சுவை, தளபதியின் உழைப்பு சேர்த்து செய்த செயல் புயலே! கனிவான இதயமும் துணிவான செயலும் கொண்ட கழகத்தின் பொக்கிஷமே உங்களுக்கும் என் வணக்கம். அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

2024-2025 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மானியக் கோரிக்கையில் உரையாற்றுவதற்கு வாய்ப்புத் தந்த, நாங்களெல்லாம் உயிராகப் போற்றுகிறது நம்முடைய ஒப்பற்ற தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், தங்களுக்கும் என்னுடைய நன்றியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிரு க்கிறேன்.

தமிழகத்தில் இருக்கிற நகர்ப்புரங்களில் குடிசைகளே இல்லாத நிலையை உருவாக்கவும், குடிசைப் பகுதியில் வாழும் ஏழை, எளிய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும், அவர்கள் பாதுகாப்பாக வாழ்ந்திட வேண்டும் என்ற நல்ல நோக்கில் இந்தியாவிலேயே முதன்முதலாக பல்வேறு திட்டங்களை நம்முடைய கலைஞர் அவர்கள் கொண்டுவந்தாலும், அதில் ஏழைகள் வாழ்வதற்காக கொண்டுவரப்பட்ட ஓர் அற்புதமான திட்டத்தை, 1970 ஆம் ஆண்டு 'தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தை' கலைஞர் அவர்கள் கொண்டுவந்தார்கள். தமிழ்நாட்டிலுள்ள நகர்ப்புர குடிசைப் பகுதிகளையெல்லாம் அடுக்குமாடி குடியிருப்புகளாக மாற்றப்பட்டுவரும் நிலையில், நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த வாரியத்தின் பெயரை 'தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்' என பெயர் மாற்றியமைத்த பெருமை நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு உண்டு. முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் 1971-1972 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த வாரியத்துக்கு ரூ.4 கோடி நிதி ஒதுக்கப்பட்டு தனது சேவையினைத் தொடங்கியது. கடந்த ஆண்டு மட்டும் ரூ.2,644 ஆயிரம் கோடிக்கு திட்டங்களை நிறைவேற்றி யிருக்கிறது நம்முடைய வாரியம் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

வாரியம் ஏற்படுத்தப்பட்டு இதுநாள் வரை சென்னை மாவட்டத்தில் மட்டும் 206 திட்டப் பகுதிகளில் 1 இலட்சத்து 17 ஆயிரத்து 16 அடுக்குமாடி குடியிருப்புகளும், இதர மாவட்டங்களில் 233 திட்டப் பகுதிகளில் 76 ஆயிரத்து 875 அடுக்குமாடி குடியிருப்பு களும் ஆக மொத்தம் 439 திட்டப் பகுதிகளில் 1 இலட்சத்து 93 ஆயிரத்து 891 அடுக்கு மாடி குடியிருப்புகள் கட்டப்பட்டு இன்று வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

2030 ஆம் ஆண்டுக்குள் "தமிழகத்தினை குடிசைகளே இல்லாத மாநிலமாக மாற்ற வேண்டும்" என்றும், "அனைவருக்கும் வீடு" என்பது நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சருடைய தொலை நோக்குத் திட்டம் ஆகும். 2014 ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்ட அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின்கீழ், 9 இலட்சத்து 53 ஆயிரம் குடியிருப்புகள் தேவை என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இதில் 3 லட்சத்து 6 ஆயிரத்து 667 வீடுகள் அடுக்குமாடி குடியிருப்பு களாகவும், தனி நபர் வீடுகளாகவும் கட்டி முடிக்கப்பட்டு, தற்போது 1 இலட்சத்து 68 ஆயிரத்து 19 குடியிருப்புகள் கட்டுகிற பணி இப்போது நடைபெற்று வருகிறது. அடுக்குமாடி குடியிருப்பு கட்டும் திட்டத்தின்கீழ், 55 ஆயிரத்து 955 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு, 78 ஆயிரத்து 590 குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது. தற்போது 9 ஆயிரத்து 151 குடியிருப்புகள் கட்டுகிற பணி துவங்கப்பட உள்ளது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆக நம்முடைய கழக அரசு பொறுப்பேற்ற இந்த மூன்று ஆண்டுகளில், 38 திட்டப் பகுதிகளிலே 16 ஆயிரத்து 173 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுவதற்கு இப்போது ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கிறது.

கடந்த அதிமுக ஆட்சியில் ஒப்பந்தப் புள்ளி இறுதி செய்யப்பட்டு தேவையான திட்ட அனுமதிகள் பெறப்படாமல், இரண்டு ஆண்டு காலம், இரண்டரை ஆண்டு காலம் திட்டங்கள் துவங்கப்படாத நிலையில், கழக அரசு பொறுப்பேற்றபின் திட்டங்களை தொடங்கும் போது இதற்கான கட்டுமான செலவு அதிகரித்ததன் காரணமாக இது போன்ற தமிழ்நாடு முழுவதும் 185 திட்டப் பகுதிகளில் 70 ஆயிரத்து 673 குடியிருப்புகள் கட்டுவதற்காக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ரூ. 708 கோடியே 81 லட்சம் ஒதுக்கப்பட்டு, தற்போது அந்தப் பணிகள் எல்லாம் வேகமாக நடைபெற்று வருகிறது என்பதை இந்த அவையிலே நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். 2014 ஆம் ஆண்டு துவங்கப்பட்ட "அனைவருக்கும் வீடு" வழங்கும் திட்டத்தில், 2014-2021 ஆம் ஆண்டு வரையிலான 6 ஆண்டு கால அ.தி.மு.க ஆட்சியில், 27 ஆயிரத்து 668 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு, 6,417 வீடுகள் மட்டும்தான் ஏழைகளுக்கு வழங்கினார்கள். அதற்கு என்ன காரணம் என்றால், நகர்ப்புறங்களுக்கு வெளியே ஆட்கள் இல்லாத இடங்களில் கட்டிவிட்டு, ஆட்களே போடமுடியாமல் போய்விட்டார்கள். இப்போது ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த மூன்று வருடத்தில் நம்முடைய முதல்வர் அவர்களால் 3,248 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பிலே, 29 ஆயிரத்து 439 அடுக்கு மாடி வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, அ.தி.மு.க ஆட்சியில் விடுபட்ட அந்த பொது மக்களுக்கு வழங்காத குடியிருப்பு



களையும் சேர்த்து 35 ஆயிரத்து 866 குடியிருப்புகள் ஏழை, எளிய மக்களுக்கு தமிழ்நாடு முழுவதும் நம்முடைய அரசு வழங்கியிருக்கிறது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல, புதிதாக கட்டி முடிக்கப்பட்ட 12 ஆயிரத்து 60 குடியிருப்புகள் இன்னும் ஒரிரு மாதங்களிலே நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவருடைய திருக்கரங் களால் தொடங்கிவைக்கப்பட இருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பயனாளிகள் தாமாக வீடு கட்டுகிற திட்டத்தின்கீழ், 4 லட்சத்து 10 ஆயிரத்து 574 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டு, கடந்த ஆட்சியில் 1 இலட்சத்து 40 ஆயிரத்து 250 வீடுகள் கட்டி முடிக்கப்பட்ட நிலையில், நம்முடைய அரசு பொறுப்பேற்று இந்த மூன்று வருடத்தில் 1 இலட்சத்து 70 ஆயிரத்து 462 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, இதுவரை இந்த திட்டத்தின்கீழ் 3 இலட்சத்து 10 ஆயிரத்து 712 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. 89 ஆயிரத்து 429 தனி வீடுகள் கட்டும் பணி தற்போது தமிழ்நாடு முழுவதும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

- அடுக்குமாடி குடியிருப்புகளின் புனரமைப்புப் பணிகள் ரூ.70 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.
- வாரிய திட்டப்பகுதிகளில் வசிக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த 5000 நபர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி!
- நில உரிமை உள்ள நலிவுற்ற மக்கள் பயன்பெறும் வகையில், தாமாக வீடு கட்டிக் கொள்ளும் திட்டத்தின்கீழ் - 1லட்சம் தனி வீடுகள் கட்டிக் கொள்ள மானியம்!
- நாவலூர் திட்டப் பகுதியில் ரூ. 1.25 கோடி மதிப்பீட்டில் விளையாட்டுத்திடல்
- 5000 நபர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி - தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய திட்டப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வழங்கப்படும்.

வாரியத்தால் கட்டப்படும் மறுகட்டுமான குடியிருப்புக்கு பயனாளிகள் செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகை மிகமிக அதிகமாக இருந்தது. பழைய வீடுகளை இடித்துவிட்டு புது வீடுகள் கட்டுகிறபோது, ஒன்றிய அரசு 1,50,000 ரூபாய் கொடுக்கிறாகள். நம்முடைய மாநில அரசு 7 இலட்சம் ரூபாய் கொடுக்கிறார்கள். ஆக 8,50,000 இலட்சம். ஆனால், கட்டிடத்தின் மதிப்பு பார்த்தீர்களென்றால் 12 இலட்சம், 13 இலட்சம் என்று வரும். ஆக பயனாளிகள் பங்களிப்பு 4 இலட்சம், 5 இலட்சம் கொடுப்பதற்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இதை முதல்வர் அவர்களிடம் சொன்னபிறகு, அந்த சாலை போடுகிற பணி, குடிநீர் தருவது, கழிவுநீர் பைப்லைனை இணைக்கக் கூடிய அந்தப் பணிகளுக்கெல்லாம் பொதுமக்களிடம் பணம் வாங்கவேண்டாம். அரசே ஏற்றுக்கொள்ளலாம் என்று சொல்லி, நம்முடைய தலைவர் அவர்கள் அந்த ஏழைகளுக்கு ஒன்றரை இலட்சம் கட்டினால் போதும். அந்தக் கட்டடத்தின் மதிப்பு 4 இலட்சம், 5 இலட்சம் வந்தால்கூட அந்தப் பயனாளி ஒன்றரை இலட்சம் கட்டினால் போதுமென்று அறிவித்தார்கள்.

### பயனாளிகளை சிரமங்களிலிருந்து பாதுகாத்தவர் முதல்வர்!

இன்றைக்கு இந்தத் திட்டத்தில் மட்டும் கடந்த 3 ஆண்டுகளில் 23,910 குடும்பங்கள் செலுத்த வேண்டிய பயனாளிகள் பங்களிப்புத் தொகை 510 கோடியே 42 இலட்சம் ரூபாய் அரசே வழங்கி அந்தப் பயனாளிகளையெல்லாம் அந்தச் சிரமத்திலிருந்து பாதுகாத்த தலைவர் முதலமைச்சர் என்பதை இந்த நேரத்தில் நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கழக அரசு பொறுப்பேற்றவுடன் சென்னையில் 30 ஆண்டுகளுக்கு முன் வாரியத்தால் கட்டப்பட்ட குடியிருப்புகள் தட்பவெப்ப சூழ்நிலையில் நீண்டநாள் பயன்பாடு சிதிலமடைந்து உருகும் தன்மையை அடைந்திருக்கிறது. நாங்களெல்லாம் சென்று பார்த்தோம். ஒரு வெடி வெடித்தாலே அந்தக் கட்டடங்கள் விழுகின்ற நிலையில் இருந்தது. அதுபோன்ற குடியிருப்புகளை வல்லுநர் குழுவைக்கொண்டு ஆய்வு செய்தோம். அவர்கள் தந்த ஆய்வறிக்கையின்படி 2021 ஆம் ஆண்டு வரை சென்னையில் மட்டும் 73 திட்டப் பகுதிகளில் 27,038 குடியிருப்புகளும் இதர மாவட்டங்களில் 9 திட்டப் பகுதிகளில் 3,354 குடியிருப்புகளும், ஆக மொத்தம் 30,392 குடியிருப்புகள் மறு கட்டுமானம் செய்திட வேண்டுமென்று அந்த ஆய்வுக் குழு பரிந்துரை செய்தது.

அதுமட்டுமல்லாமல், மார்ச் 2024 வரை இன்னொரு ஆய்வு செய்யப்பட்டதில் கூடுதலாக 5,833 வீடுகள் மறுகட்டுமானம் செய்யப்பட வேண்டுமென்று ஆய்வறிக்கை தந்திருக்கிறது. ஆக, வாரியத்தால் கண்டறியப்பட்டிருக்கிற அந்த சிதிலமடைந்த வீடுகளை யெல்லாம் புதியதாக கட்டித் தரப்பட வேண்டுமென்று சொல்லி, 2021-2022, 2022-2023 ஆம் ஆண்டுகளில் நம்முடைய முதல்வரவர்கள் 2,400 கோடி ரூபாய் மதிப்பிலே 15 ஆயிரம் வீடுகள் கட்டப்பட வேண்டுமென்று நாம் அறிவித்தோம். அதன்படி 28 திட்டப் பகுதிகளில் 7,582 குடியிருப்புகள் இடிக்கப்பட்டு, ரூபாய் 1,608 கோடியே 89 இலட்சம் மதிப்பீட்டில் 9,522 குடியிருப்புகள் கட்டுகிற பணி இப்போது வேகமாக நடைபெற்று வருகிறது. மீதமுள்ள குடியிருப்புகளிலும் கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கப்படவிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏழையெளிய மக்கள் அதிகம் வசிக்கின்ற வடசென்னை பகுதியை மேம்படுத்துவதற்காக நம்முடைய முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் வாட்டர் பேசின் சாலை, ஸ்டான்லி சாலை, கொடுங்கையூர், கோதண்டராமர் தெரு, ஈஸ்ட் சிமெண்டரி ரோடு ஆகிய இடங்களில், ரூ.416 கோடியே 64 இலட்சம் மதிப்பில் 2 ஆயிரத்து 580 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுகின்ற பணிகள் விரைவில் துவங்கப்பட உள்ளது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாரியத்தால் 15 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டு பழுதடைந்த குடியிருப்புகளை புனரமைக்கும் திட்டத்தின்கீழ், ரூ.82 கோடியே 57 லட்சத்து 43 ஆயிரம் மதிப்பில் 31 ஆயிரத்து 239 அடுக்குமாடி குடியிருப்புகள் புனரமைக்கும் பணிகள் இப்போது துவங்கப்பட்டிருக்கிறது. இதுவரை 19 ஆயிரத்து 374 குடியிருப்பு கள் புனரமைக்கப்பட்டிருக்கிறது. மீதியிருக்கின்ற 10 ஆயிரத்து 513 குடியிருப்புகளில் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த நிதி நிலையில் அறிவிக்கப்பட்ட அயோத்திதாச பண்டிதர் குயிருப்புகள் மேம்பாட்டு திட்டத்தின்கீழ், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு, 4 ஆண்டுகளுக்கு, ரூ.200 கோடி நிதியை ஒதுக்கித் தந்தார்கள்து. இதில், கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட ரூ. 50 கோடி நிதியில் 32 திட்டப் பகுதிகளில் வாழும் 12 ஆயிரத்து 465 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் மேல்நிலை நீர்தேக்க தொட்டி, அங்கன்வாடி மையம், நியாய விலைக் கடைகள், சாலை, மின்விளக்கு, மழை நீர் வடிகால் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சென்னையில் உள்ள அடையாறு, கூவம் ஆற்றங்கரைகளில் வசித்த ஏழை குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் கட்டித் தர வேண்டுமென்பதற்காக, 23 ஆயிரத்து 796 ஏழை குடும்பங்கள் மறுகுடிமயர்வு செய்யவேண்டுமென்று கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. இதில், 18 ஆயிரத்து 535 குடும்பங்கள் பெரும்பாக்கம், கண்ணகி நகர், கூடப்பாக்கம் போன்ற பல்வேறு பகுதிகளில் இன்றைக்கு குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். மீதமுள்ள 5,261 குடும்பங்களுக்கு விரைவில் வீடுகள் வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறுகுடிமயர்வு செய்யப்பட்ட பெரும்பாக்கம், துரைப்பாக்கம், நாவலூர், அத்திப்பட்டு ஆகிய திட்டப் பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக ரூ.16 கோடியே 86 இலட்சம் செலவில் குடிநீர் வசதி, ரூ.4 கோடியே 20 லட்சம் செலவில் விளையாட்டு மைதானம், ரூ.7 கோடி மதிப்பில் நவீன நூலகம், சமுதாய நல கூடம் கூடுதல் பள்ளி வகுப்பறைகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.

### மகளிர் நலம், போதை தடுப்பு போன்றவற்றில் விழிப்புணர்வு!

மறுகுடியமர்வு செய்யப்பட்டவர்களில் 31 ஆயிரத்து 432 நபர்களுக்கு மகளிர் நலம், வாழ்வாதார மேம்பாடு, சுகாதாரம், போதை தடுப்பு, போன்றவற்றில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

6,796 இளைஞர்களுக்கு திறன் மேம்பாடு பயிற்சிகளும், 1,454 இளைஞர்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சியும் வழங்கப்பட்டிருக்கிறது. 601 மாணவ/மாணவிகளுக்கு பல்வேறு நிறுவனங்களிடமிருந்து CSR நிதியினைப்பெற்று, உயர்கல்வி பயில உதவித்தொகையாக ஒரு கோடியே முப்பத்து எட்டு இலட்சத்து நாற்பத்து ஐந்து ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் வாரியத்திற்கு போதிய பணியாளர்கள் இல்லாத வாரியங்கள் செயல்படாத நிலை இருந்தது. நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு அரசின் திட்டங்களை வேகமாக செயல்படுத்திடவேண்டு மென்பதற்காக TNPSC மூலமாக 63 உதவிப் பொறியாளர், 11 சமூதாய அலுவலர், 62 இளநிலை உதவியாளர், 68 பண வசூலாளர், 7 சுருக்கெழுத்து தட்டச்சர் என 211 பணியாளர்கள் இப்போது நியமிக்கப்பட்டு இன்றைக்கு வாரியம் வேகமாக செயல்படுகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதில் முக்கியமாக ஒரு விஷயம் என்னவென்றால் தமிழ்நாடு முழுவதும் நகர்ப்புரக் குடிசை பகுதியில் வாழும் ஏழையெளிய மக்களுக்கு குடிசைப் பகுதி மேம்படுத்தி, மனைகளாக பிரித்து அவர்களுக்கு வழங்கவேண்டுமென்பதற்காக, சென்னை நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம், தமிழ்நாடு நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 1980 ஆம் ஆண்டு முதல் 1995 ஆம் ஆண்டு வரை நிறைவேற்றப்பட்டது. இந்தத் திட்டத்தின் மூலமாக 741 குடிசைப் பகுதிகள் மேம்படுத்தப்பட்டு ஒரு லட்சத்து 34 ஆயிரத்து 678 மனைகள் ஏழை எளிய மக்களுக்கு வழங்கப்பட்டது. இதில், 593 திட்டப் பகுதிகளுக்கு அரசாணை வெளியிடப்பட்டு, வாரியத்தின் பெயரில் நில உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதில் 37 ஆயிரத்து 357 ஒதுக்கீட்டுதாரர்களுக்கு கிரையப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு வருவாய்த் துறையின் மூலம் பட்டா பெறுவதற்கு வழி வகை செய்யப்பட்டுள்ளது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மீதமுள்ள 148 திட்டப் பகுதிகளில் நில உரிமை மாற்றம் செய்து, வருவாய்த் துறை மூலம் பட்டா வழங்குவதற்கு ஏதுவாக சிறப்பு திட்டச் செயலாக்க துறையின் கீழ் அமைச்சர்கள், அதிகாரிகள் தலைமையில் இன்றைக்கு செயலாக்கக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம், ஏழை எளிய மக்களின் நீண்ட கால பிரச்சினைக்கு கழக அரசால் தீர்வு காணப்பட்டு, அவர்களுக்கும் பட்டா வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆக, இன்றைக்கு, இங்கே உரையாற்றிய நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் ஒருவர்தான் அடுக்குமாடி குடியிருப்பு வீடு வேண்டுமென்று செய்யாறு சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. ஜோதி அவர்கள் கேட்டார். அந்த நகர்ப்புரங்களிலே அரசு, அதாவது ஆட்சேபனையற்ற புறம்போக்கு இடம் எல்லா நகரங்களிலும் இருந்தது என்று சொன்னால், அங்கே பயனாளிகள் இருந்தால், அவர்கள் வருடத்திற்கு 3 இலட்சம் ரூபாய்க்குள் வருமானம் இருந்தால், அவர்கள் பயனாளி பங்குத்தொகை செலுத்துவதாக இருந்தால், எல்லா நகரத்திலும், பேரூராட்சிகளிலும் அடுக்குமாடு குடியிருப்பு வீடுகள் கட்டித்தருவதற்கு வாரியம் தயாராக இருக்கிறது. இடம் தந்தால், பயனாளிகள் இருந்தால் நிச்சயமாக அந்தப் பணியை நாங்கள் நிறைவேற்றித் தருவோம் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஆக இன்றைக்கு நம்முடைய தமிழக முதல்வரின் வழிக்காட்டுதலின் படி ஏழையெளிய மக்களுக்கு பரவலாக வீடு வழங்கிக்கொண்டிருக்கிறோம். ஆக, எங்கெங்கெல்லாம் வீடு வேண்டுமென்று கேட்டீர்களென்றால் அங்கே வீடு கட்டித் தருவதற்கு உரிய இடம் இருந்தால், பயனாளிகள் இருந்தால் வீடு கட்டித்தருவதற்கு வாரியம் தயாராக இருக்கிறது என்பதை மட்டும் சொல்லிக்கொள்கிறேன்.

1. தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய திட்டப்பகுதியில் அடுக்குமாடி குடியிருப்பு களின் புனரமைப்பு பணிகள் ரூ.70 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

2. நில உரிமை உள்ள நலிவுற்ற மக்கள் பயன் பெறும் வகையில் தாமாக வீடுகட்டிக் கொள்ளும் திட்டத்தின் கீழ் 1 இலட்சம் தனி வீடுகள் கட்டிக் கொள்ள மானியம் வழங்கப்படும்.

3. தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய நாவலூர் திட்டப் பகுதியில் வசிக்கும் பொதுமக்கள், இளைஞர் மற்றும் குழந்தைகளின் நலனுக்காக நாவலூர் திட்டப்பகுதியில் ரூ.1.25 கோடி மதிப்பீட்டில் விளையாட்டு திடல் அமைக்கப்படும்.

4. தமிழ்நாடு நகர்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்ட பெரும்பாக்கம் திட்டப்பகுதியில் வாழ்ந்து வரும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த திறன்மேம்பாட்டு பயிற்சி வழங்கிட ரூ. 1 கோடி மதிப்பீட்டில் தொழிற் பயிற்சி கூடம் அமைக்கப்படும்.

5. தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய திட்டப்பகுதிகளில் வசிக்கும் குடும்பங் களில் மகளிர் நலனை கருத்தில் கொண்டு அவர்களின் மேம்பாட்டிற்காக திட்டப்பகுதிகளில் வசிக்கும் 2000 மகளிருக்கு சிறப்பு சுய தொழில் பயிற்சி வழங்கி மற்றும் வங்கிகடன் இணைப்பு செய்து வாழ்வாதாரம் மேம்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

6. ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், நல்லகவுண்டன்பாளையம் திட்டப் பகுதியில் 3,264 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளது. இப்பகுதியில் வாழும் மக்களின் அத்தியாவசிய தேவையை கருத்தில் கொண்டு கடைகள் மற்றும் உடற்பயிற்சி கூடங்கள் ரூ.1 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

7. தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய திட்டப்பகுதிகளில் வசிக்கும் விளையாட்டில் ஆர்வம் உள்ள திறமையானவர்களை கண்டறிந்து அவர்களுக்கு கைப்பந்து, கபடி, கூடைப்பந்து, கால்பந்து போன்ற விளையாட்டு களில் சிறப்பு பயிற்சி அளிக்கப்படும்.

8. தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய திட்டப்பகுதிகளில் வசிக்கும் குடியிருப்பு தாரர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வாரியம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் அடிப்படையில் 5000 நபர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் தா.மோ. அன்பரசன் பதிலுரை வழங்கினார்.